# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை—600 032
தொலைபேசி எண்: 044—22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in


முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன்,** இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 49/ந/2024
நாள்:. 08.01.2025

திரு. த. லோகேஷ்,
ஆற்காடு, இராணிப்பேட்டை மாவட்டம். ... முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர், ... எதிர்மனுதாரர்
ஆற்காடு நகராட்சி, இராணிப்பேட்டை மாவட்டம்.

இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு, அறிஞர் அண்ணா சாலை, க.எண்.175 என்ற முகவரியை சேர்ந்த 12வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு. த. லோகேஷ் என்பவரது 20.02.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.02.2024 அன்று பெறப்பட்டு, 49/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு, அறிஞர் அண்ணா சாலை, க.எண்.175 என்ற முகவரியை சேர்ந்த 12வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு. த. லோகேஷ் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"I request the Commissioner of Municipal Administration to clear all the encroachment in my ward. One of the person who is living in ward 12 has support of Chairman of Arcot decide to take the Municipal property of their own by passing the content in the Councilor meeting. I strongly opposed that action which is against the law and order. So far that reason the Chairman has issued me suspend order for two meetings. I request you to take speedy action regarding this issue.

<u>ஆற்காடு நகராட்சி ஆணையாளர்க்கு அளிக்கப்பட்டுள்ள கோரிக்கைகள்</u>

1) கம்சலா தனியார் மண்டபம் உரிமையாளர் அரசுக்கு சொந்தமான கழிவுநீர் வடிகால் கால்வாயை ஆக்கிரமிப்பு செய்து சுற்றுசுவர் அமைத்துள்ளார். கால்வாய் மண்டபத்திற்குள் இருப்பதால் அவ்வப்போது அடைப்பு ஏற்படுகிறது. இந்த அடைப்பினை சரிசெய்ய முடியவில்லை. இதனால் குடியிருப்பு பகுதிகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் கால்வாயிலேயே தேங்கி நிற்பதால் துர்நாற்றம் வீசி கொசுக்கள் உற்பத்தி அதிகமாகி நோய்தொற்று ஏற்படும் நிலை உள்ளது. மேலும் அரசு விதிமுறையின்படி மண்டபத்தில் வாகனங்களை நிறுத்த பார்க்கிங் வசதி இல்லை. முறையான கழிவறைகள் இல்லை. குப்பை கழிவுகளை மண்டபத்திலிருந்து திறந்தவெளியில் கொட்டி வைக்கின்றார்கள். மண்டபமே சுகாதாரமற்ற நிலையில் உள்ளது. எனவே நடவடிக்கை எடுத்து ஆக்கிரப்புகளை அகற்றி தரவேண்டும்.

2) மண்டபத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு வரும் நபர்கள் மற்றும் அங்குள்ள சில நபர்கள் எதிரே உள்ள அரசு நிதி உதவி பெறும் சரஸ்வதி தனகோட்டி சிறுவர் பள்ளி கட்டிட வளாகத்தில் அமர்ந்து மதுபானம் குடித்துவிட்டு பாட்டில்களை அங்கேவீசி செல்கின்றனர். குழந்தைகள் நலன் கருதி அங்கு கண்காணிப்பு கேமரா வைத்து இதுபோன்று தவறுசெய்யும் நபர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3) 12வது வார்டுக்கு உட்பட்ட வேதகிரி தெரு, எம்பெருமாள் செட்டித்தெரு, தியாகராஜன் தெரு, பழைய மண்டித்தெரு, கோவிந்தராஜ் தெரு, காலேபார் தெரு, இராமன் தெரு, ஒத்தவாடை தெரு, ஜெகந்நாதன் தெரு, ஆகிய தெருக்களை நீளம் , அகலம் அளவீடு செய்து கழிவு நீர் கால்வாய் கட்டி சிமெண்ட் சாலை அமைத்து தரவேண்டும். குறிப்பாக எம்பெருமான் கோயில் தெரு,பழைய மண்டித்தெரு, வெங்கடாஜலபதிதெரு, ஒத்தவாடை தெருக்களில் கல்வெட்டுக்கள் அமைத்து தரவேண்டும்.

4) காலேபார் தெருவில் மழை காலங்களில் தண்ணீர் குளம் போல் தேங்கி நிற்கிறது. மண் கொட்டி மேடாக்கி சிமெண்ட் சாலை அமைக்க வேண்டும்.

5) அனைத்து தெருக்களிலும் புதிய மின் விளக்குகள் அமைத்து தரவேண்டும்.

6) 12வது வார்ட்டில் தற்போது இயங்கி வரும் பழைய மின் மோட்டாரை மாற்றி புதிய மின் மோட்டார் அமைத்து தரவேண்டும். ஒவ்வொரு தெருக்களிலும் பெயர் பலகை வைக்க வேண்டும்.

7) ஒத்தவாடை தெருவில் அங்கன்வாடி மையம் கட்டிடம் மற்றும் சமையலறை சிதிலமடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளது. எப்பொழுது வேண்டுமானாலும் இடிந்து குழந்தைகள் மேல் விழும் அபாய நிலையில் உள்ளது. எனவே அங்கன்வாடி பழைய கட்டிடத்தை அகற்றி, புதிய கட்டிடம் கட்டிடத்தரவேண்டும்.

8) 12வது வார்டு பொறுத்தவரை குரங்குகள், நாய்கள் தொல்லை அதிகரித்து வருகிறது. இதனால் பொதுமக்கள் தினமும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். குரங்கு, நாய் பிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் இரண்டு மாதத்திற்கு ஒருமுறை கட்டாயம் துாய்மை பணி (Mass work) செய்து தரவேண்டும்.

9) வாலிபர்கள் உடற் பயிற்சி செய்வதற்கு ஜிம் / உடற்பயிற்சி கூடம் அமைத்து தரவேண்டும்.

10) 12வது வார்டுக்குட்பட்ட காலியிட மைதானத்தில் நவீன பூங்கா அமைத்து தரவேண்டும். புதிய நியாயவிலைக்கடை கட்டித்தர வேண்டும்.

மேற்கண்ட இக்கோரிக்கைகளை நிறைவேற்றிதர பதவியேற்றுக் கொண்ட நாளிலிருந்து ஒவ்வொரு நகரமன்ற கூட்டத்திலும் வலியுறுத்தி வருகிறேன். நகரமன்ற கூட்டத்தில் குறைகளை கேட்டு தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது தவிர, நடைமுறையில் ஒரு கோரிக்கையைக்கூட இதுவரையில் நிறைவேற்றி தரவில்லை என தெரிவித்து, I request the Tamil Nadu Local Bodies Ombudsman to take an speedy action regarding this issues" என கேட்டுக்கொண்டுள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 25.07.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் ஆற்காடு நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

**3) ஆற்காடு நகராட்சி ஆணையர் தனது 12.12.2024 நாளிட்ட கடிதத்தின் வழி கீழ்க்கண்டவாறு தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.**

"மனுதாரர் திரு. த. லோகேஷ், ஆற்காடு அவர்கள் சுயேட்சை வேட்பாளராக ஆற்காடு நகராட்சி உள்ளாட்சி தேர்தல் 2022ல் போட்டியிட்டு வார்டு 12 –ன் நகர மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். மேலும் ஆற்காடு நகராட்சியில் 16.02.2024 அன்று நடைபெற்ற சாதாரண மாதாந்திர நகர மன்ற கூட்டத்தில், நகர மன்ற உறுப்பினர் திரு. த. லோகேஷ் அவர்கள் நகரமன்ற விதிகளுக்கு புறம்பாகவும் நகர மன்ற தலைவர் அவர்களை கூட்டம் நடத்த விடாமல் இடையூறு செய்தும், மன்ற கூட்டத்தில் தேசீய கீதம் இசைத்த போது எழுந்து நின்று மரியாதை செலுத்தாமல் அமர்ந்தபடியே தர்ணா செய்து தேசீய கீதத்தை அவமதிப்பு செய்ததால் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023-விதி எண்.160(8) (i) (ii) மற்றும் (iii)-ன் கீழ் திரு. த. லோகேஷ் நகரமன்ற உறுப்பினரை இனிவரும் காலங்களில் நடைபெற உள்ள இரண்டு சாதாரண மாதாந்திர கூட்டத்தில் கலந்து கொள்ளாதவாறு தடை விதித்தும் நகரமன்ற உறுப்பினரை வன்மையாக கண்டித்தும் நகரமன்ற தலைவர் அவர்களால் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். மேலும் 30.10.2024 தடை காலம் முடிந்து 27.11.2024 அன்று நடைபெற இருந்த சாதாரண மாதாந்திர கூட்டத்தில் கலந்துகொள்ள அழைப்பு அனுப்பப்பட்டு இந்நகரமன்ற கூட்டத்தில் கலந்துகொண்டார் என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும், 26.05.2023 அன்று திரு. த. லோகேஷ் அவர்கள் அலுவலக நேரத்தில் ஆணையாளர் அறையில் நுழைந்து மிரட்டும் தோரணையில் பேசி கூச்சலிட்டு பணி செய்ய விடாமல் கலாட்டா செய்து ஆணையரின் அறையை பூட்டி விடுவேன் என மிரட்டும் விதமாகவும், ஆணையாளரை பணி செய்ய விடாமல் இடையூறு செய்ததால் தனியர் மீது ஆற்காடு நகர காவல் நிலையத்தில் அன்றைய ஆணையரால் 27.05.2023 அன்று புகார் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இப்புகார் தொடர் நடவடிக்கையில் உள்ளது.

மேலும் ஆற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.12, பழைய மண்டி தெரு பகுதியில் வார்டு – D பிளாக் எண்.04, நகரளவை எண்.127/4 (U)-ல் உள்ள இடத்தில் சாலையோர கால்வாய் ஆக்கிரமிப்பு உள்ளதும், சாலை சந்திப்பின் வெற்றிடத்தில் பொது மக்களால் Hotspot for solid waste Disposal-க்கு உள்ளாக்கும் பகுதி என்பதாலும், பாரம்பரிய சேவை நிறுவனத்தின் அங்கமாக செயல்படும் திருமதி. கம்சலாம்பாள் டிரஸ்ட் நிறுவனத்திற்கு அந்த Hotspot-க்கு உள்ளாகும் சாலையோர பகுதியை உரிமை கொண்டாட இயலாது எனவும், தேவையின் அடிப்படையில் நகராட்சி ஆணையாளர் தன் பொறுப்பில் எப்போது வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ள முழு உரிமை உண்டு எனவும், மேலும் இதுபோன்ற Hotspot இடங்களை பொது சுகாதார பிரிவுடன் இணைந்து கண்டறிந்து Green Space Development on Road Side Vacant Plan உருவாக்கி நகர பசுமை ஊக்குவிக்க பரிந்துரைக்கலாம் என தெரிவித்து மன்றத்தில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பசுமை பூங்கா

(Green Park) மற்றும் வெற்றிட இடங்களை தனியார் தொண்டு நிறுவனங்கள் மூலம் பராமரிக்க உரிய அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

மேலும் நகரமன்ற உறுப்பினர் இடைநீக்கம் நிகழ்விற்கும், புகார் மனு நடவடிக்கைகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. எனவே திரு. த. லோகேஷ், நகரமன்ற உறுப்பினர் ஆற்காடு நகராட்சி அவர்கள் தேசீய கீதத்தை அவமதித்தும் மற்றும் நகரமன்ற தலைவர் அவர்களை கூட்டம் நடத்த விடாமல் இடையூறு செய்தமைக்கும், நகரமன்ற தலைவர் அவர்களால் இடைநீக்கம் செய்யப்பட்டு தற்போது நடந்த கூட்டத்தில் கலந்து கொண்டார் என்ற விவரம் மிகவும் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

**4) மனுதாரரும் மற்றும் ஆற்காடு நகராட்சி ஆணையரும் 13.12.2024 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 29.11.2024 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**5) மனுதாரர் திரு. த. லோகேஷ் என்பவர் 13.12.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்.**

i. வார்டு–12 வெங்கடாசலம் தெரு கம்சாலா அம்மாள் டிரஸ்டி திருமண மண்டபம் ஆக்கிரமிப்பில் இருப்பதை அகற்றப்பட வேண்டும்.

ii. 12–வது வார்டு மக்கள் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றித்தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

iii. ஆக்கிரமிப்பு உள்ள அனைத்தும் அகற்றி இருபுற கால்வாய் அமைத்து சாலை வசதி செய்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

iv. 12–வது வார்டு மக்களுக்கு அடிப்படை வசதியான குடிநீர், கழிவுநீர் கால்வாய், தரமான சாலை மற்றும் சுகாதார சுற்று சூழல் பராமரிக்கப்பட வேண்டும்.

v. சரஸ்வதி நிதி உதவி பள்ளியில் உள்ள மண்டபத்திற்கு வரும் பொதுமக்கள் மது அருந்திவிட்டு வீணான பிரச்சினைகளை உருவாக்குகிறார்கள். மேலும் அங்குள்ள கால்வாயில் அடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் வெளியேறாமல் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு சுகாதார கேடு ஏற்படுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**6) எதிர்மனுதாரரான ஆற்காடு நகராட்சி ஆணையர் ப.வெங்கடலட்சுமணன் என்பவர் 13.12.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:-**

- ஆற்காடு நகராட்சியில் உள்ள கம்சலா அம்மாள் டிரஸ்ட் கட்டடம் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக நகர மன்ற உறுப்பினர் தெரிவித்ததை தொடர்ந்து நகரமன்ற அலுவலர்களுடன் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கட்டடத்தின் உரிமையாளர் மழைநீர் வடிகால் கால்வாய் மீது படிகட்டு மற்றும் தற்காலிக தடுப்பு அமைப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது தெரிய வந்தது. இருப்பினும் அக்கட்டடம் சேவை நோக்கத்தோடு செயல்பட்டு வருவதாலும், அவ்விடத்தில் பொது மக்களால் குப்பைகள் கொட்டப்பட்டு அசுத்தம் செய்யப்படுவதால், பொது மக்கள் நலன் கருதி இந்நிகழ்வை தடுக்கும் விதத்தில் 16.02.2024 அன்று நடைபெற்ற மாதாந்திர சாதாரண நகர மன்ற கூட்டத்தில், நகர மன்ற தலைவர் அவர்களால் விவாதம் மேற்கொள்ளப்பட்டு, அவ்விடத்தினை பசுமை பூங்காவாக பராமரிக்கவும் அவ்விடத்தினை மேற்படி டிரஸ்ட்

உரிமை கோரக்கூடாது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனை தொடர்ந்து இப்பொருள் தொடர்பாக கருத்துரு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

- இதற்கிடையில், கால்வாய் ஆக்கிரமிப்பு கண்டறியப்பட்ட உரிமைதாரருக்கு அறிவிக்கை **04.03.2024** மற்றும் **24.05.2024** ஆகிய தேதிகளில் வழங்கப்பட்டுள்ளது. இவ்வறிக்கை மீது வழக்கு தொடரப்பட்டுள்ளதாக நில உரிமையாளர் தெரிவித்துள்ளார் வழக்கு விவரத்தினை ஒரிரு நாட்களில் இம்முறை மன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கிறேன் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.
- மேலும், இவ்விடத்திற்கான சேதமடைந்த சாலையினை புதிய சாலை அமைக்க முயன்றபோது உறுப்பினர் (மனுதாரர்) இடையூறு மற்றும் தடைவிதித்து வருகிறார். ஆகையால் சாலை அமைக்க இயலவில்லை.
- கம்சலா அம்மாள் டிரஸ்ட் கட்டடத்தின் எதிரே உள்ள இடத்தில் மது அருந்துவதாக மனுதாரர் தெரிவித்திருப்பது முற்றிலும் தவறானது. அவ்வாறான நிகழ்வுகள் அங்கு நடைபெறவில்லை.
- மேலும், காளப்பன் தெருவில் மழைகாலங்களில் நீர் தேக்கம் ஏற்படுவதை கண்டறிந்து கால்வாய் சரி செய்யப்பட்டது. மேலும் அச்சாலையை உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சாலை அமைப்பதற்கான நிதி பெற்றவுடன் சாலை அமைக்கப்படும்" என தெரிவித்துள்ளார்.

**7) மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், ஆற்காடு நகராட்சி ஆணையரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.**

இந்நேர்வில், ஆற்காடு நகராட்சி ஆணையர் தனது நேரடி விசாரணையில் கால்வாய் ஆக்கிரமிப்பு தொடர்பாக கம்சலா தனியார் மண்டபம் உரிமையாளருக்கு அறிவிக்கை 04.03.2024 மற்றும் 24.05.2024 ஆகிய தேதிகளில் வழங்கப்பட்டதை தொடர்ந்து நில உரிமையாளர் ஆற்காடு மாவட்ட முனிசிப் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் O.S எண். 92/2024–ல் வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும், அவ்வழக்கு நிலுவையில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10(3) (b) ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரித்தலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

Sec. 10 (3) The Ombudsman shall not enquire into matters relating to

(a) Xxxxx

(b) Any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquirieis Act 1962 or any matter pending before a Court.

மேற்காணும் சூழ்நிலையில், 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10(3) (b) ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரித்தலாகாது என்பதால், இப்பொருள்

தொடர்பான மேல்நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள் 8–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. த. லோகேஷ்,
12வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்
க.எண்.175, அறிஞர் அண்ணா சாலை,
ஆற்காடு, இராணிப்பேட்டை மாவட்டம்.

2) ஆணையாளர்,
ஆற்காடு நகராட்சி,
இராணிப்பேட்டை மாவட்டம்.

3) நகராட்சிகளின்இயக்குநர்,
நகராட்சிகளின்இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி நகர், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரியிடப்பட்ட உரையில்)
நகராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை –600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர் / செயலாளர் (முகூபொ)